பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 19 சனிக்கிழமை (03.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 98

## யாழ். மாவட்ட மாணவர்களின் பாதிப்புக்குறித்து தனித்தனியாக ஆராய்ந்து நிவாரணம் வழங்கப்படும்

### பிரதி உயர்கல்வி அமைச்சர் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச்3

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொறியியல் மற்றும் மருத்துவத்துறை மாணவர்களின் பாதிப்புக் குறித்த முறைப்பாடுகள், ஒவ்வொன்றாக - தனித்தனியாக - ஆராயப்பட்டு நிவாரணம் வழங்கப்படும். உயர்கல்வி பிரதிஅமைச்சர் மயோன் முஸ்தபா இவ்வாறு உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பொறியியல் மற்றும் மருத்துவத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் தமது அனுமதியில் உள்ள பாதிப்புக் குறித்து என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் விவரங்களை, அவர்களைத் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் எனது தொலைநகல் இலக்கம் :- 0112868253 இற்கு உடன் 'பக்ஸ்' செய்ய வேண்டும்.

அவர்களின் பாதிப்புக் குறித்து பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுத் தலைவருடன் எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் ஆராயவுள்ளேன். ஆகவே உடன் விவரங்களை அனுப்புவது நல்லது.

அவர்களின் பாதிப்புக் குறித்து தனித்தனியாக ஆராய்ந்து, நிவாரணம் வழங்கக்கூடிய நிலை காணப்பட்டால் உடன் அதற்கு ஏற்பாடு செய்யப்படும் - என்றார். (அ-1)

## தொப்பிகலவில் தாக்குதல்

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தொப்பிகலப் பகுதியில் நேற்றுப் படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் இடம் ஒன்றை இலக்குவைத்து விமானப் படையின் மிக் விமானங்கள் மூலம் குண்டு வீச்சுக்களை நடத்திய வேளை - தரையில் இருந்து பல்குழல் பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இத்தாக்குதல் சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்றன.

இதன்போது புலிகளின் 31 உறுப்பினர்கள் படுகாயமடைந்துள்ளனர் எனவும் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் புலிகளின் தகவல் பரிமாற்றம் மூலம் அறியவந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, இத்தாக்குதலின்போது தமக்கு ஏதும் சேதம் விளையவில்லைஎனபுலிகள்மறுப்புத்தெரிவித்துள்ளனர்.

## வடக்கு - கிழக்கு நிலைமையை மலையகத்திலும் ஏற்படுத்தாதீர்!

### மாகாணசபை உறுப்பினர் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 3

**மலையகத் தமிழர்களும், தோட்டத் தொழிலாளர்களும் வகை தொகையின்றி கண்டபடி கைது செய்யப்படுவது தொடர்ந்தால் வடக்கு - கிழக்குப் போன்றே மலையகத்திலும் அமைதியற்ற சூழ்நிலைதோன்றும். அதற்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டிவரும்.**

**இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை எச்சரித்திருக்கின்றார் தொழிற்சங்கப் பிரமுகரும் ஊவா மாகாணசபை உறுப்பினருமான கே.வேலாயுதம்.**

இவ்விடயம் தொடர்பாக அவர், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இங்கு பிறப்பவர்கள் எவரும் ஆயுதங்களுடன் பிறப்பதில்லை. அவர்கள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகளும் பாகுபாடுகளும் ஆக்கிரமிப்புகளுமே அவர்களை மாற்றுவழிக்கு இட்டுச் செல்கின்றன.

தமிழ் மக்கள் மீது இவை பலவந்தமாகத் திணிக்கப்பட்டதனாலேயே வடக்கு - கிழக்

(03ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர் நேற்று உண்ணாவிரதப் போர்

### ஒரு வாரத்துக்கு துக்கம் அனுஷ்டிப்பர்

யாழ்ப்பாணம், மார்ச்3

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பல்கலைக்கழக வளாகத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கலைப்பீட மாணவன் செல்வரட்ணம் சிவரஞ்சன் (வயது 23) இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்தே மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

செல்வரட்ணம் சிவரஞ்சன் கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாதோரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், மிருசுவில் பகுதியில் உள்ள இவரது சிறிய தந்தையின் வீட்டில் வைத்தே சுடப்பட்டார்.

இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்து காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை கைலாசபதி கலையரங்கு முன்பாக உண்ணா

(03ஆம் பக்கம் பார்க்க)

## அகதி அந்தஸ்துக் கோருவோர் விவகாரம்:

## பசுபிக் தீவுக்கு அனுப்பி விசாரிக்க ஆஸ்திரேலிய அரசு உத்தேசம்

### இந்தோனேஷியா மறுத்துவிட்டதால்

சிட்னி, மார்ச் 3

ஆஸ்திரேலியாவிற்கு அகதி அந்தஸ்துக் கோரிச் சென்ற 83 இலங்கைத் தமிழர்களையும் இப்போது தங்கியிருக்கும் கிறிஸ்மஸ் தீவிலிருந்து பசுபிக்தீவானநவுறுவுக்குஅனுப்பி, அங்குவைத்து அவர்கள் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகளால் விசாரணை செய்யப்படுவர் என்று அறியப்படுகிறது.

இவர்களை இந்தனோசியாவுக்கு தனது செலவில் அனுப்பி அங்கு வைத்து ஐ.நா. அதிகாரிகள் மூலம் விசாரித்து அறியும் யோசனையை ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் முன்வைத்திருந்தார்.

ஆனால் இந்தனோசியாவின் வெளிவிவகார திணைக்களம் அவ்வாறு செய்ய இயலாது என்று மறுத்துவிட்டது. வேண்டுமானால் அகதிஅந்தஸ்துக் கோருவோரை இங்கு வருவதற்கு அனுமதிப்போம்.

அவர்களை இடைத்தங்கலுக்கும் அனுமதிப்போம். சர்வதேச நிறுவனம் ஒன்று இதில் சம்பந்தப்பட வேண்டிய தேவை இருப்பதாக நாம் கருதவில்லை. அவர்களைச் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைப்பதற்கு நாம் தயார் - என்று இந்தோனேசியாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் டெஸ்ரா பேர்க்காயா தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை-

அகதி அந்தஸ்துக் கோருவோர் நவுறாத் தீவில் வைத்து முழுக்க முழுக்க ஐ.நா. விதிமுறைகளுக்கு ஏற்பவே விசாரிக்கப்படுவர்.

அகதிகள் பிரகடனத்தினை ஏற்றுக் கொண்டுள்ள நமது நாடு அதன் பிரகாரம் நியாமான, நீதியான முறையிலேயே விசாரணைகளை மேற்கொள்ளும். ஆகையால், அது குறித்து எவரும் கவலை கொள்ளத்தேவையில்லை - என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். (அ)

## பேச்சுவார்த்தை மூலமே தீர்வு அமெரிக்கத் தூதுவர் உறுதி

நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய பிரச்சினைக்குப் பேச்சு ஒன்றின் மூலம் மட்டுமே தீர்வு காணமுடியும் என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியாகவே இருக்கின்றேன். இதனைத் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்கிறார் அமெரிக்கத்தூதுவர் றோபேட் பிளேக்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் மீதான தாக்குதலின்போது தெய்வாதீனமாக சிறு காயங்களும் இன்றி தப்பியவர் அமெரிக்கத் தூதுவர்.

இச்சம்பவம் இடம்பெற்ற மூன்று தினங்களின் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அமெரிக்கத்தூதுவர் இதனை மீண்டும் வலியுறுத்தினார்.

ஜாதிக ஹெல உறுமயவினர் கூறுவது போல்என்துநிலைப்பாட்டைமாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

ஜாதிக ஹெல உறுமயவினரின் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இராணுவ நடவடிக்கையின் மூலம் மட்டும் தான் இத்தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என ஜாதிக ஹெல உறுமயவினர் கூறுகின்றனர். இது சாத்தியப்படாத ஒன்று எனவும் அமெரிக்கத்தூதுவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்

(03ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஈ-ரற்பெரியகுளத்தில் ஷெல் வீழ்ந்ததால் பெரும் பதற்றம்!

### சிப்பாய், பொலிஸ் உத்தியோகத்தர் காயம்; பாடசாலைகள் மூடப்பட்டன

வவுனியா, மார்ச் 3

வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஷெல் குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்திருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஈரற்பெரியகுளம் ரயில் நிலையத்துக்கு சமீபமாக இந்தச் ஷெல் வீழ்ந்து வெடித்தது.

அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாய் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் இதனால் காயமடைந்திருக்கின்றனர். இருவரும் பின்னர் வவுனியாமருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த ஷெல் குண்டு விடுதலைப் புலிகளால் ஏவப்பட்டது என்று பொலிஸார்

(03ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த - புலிகள் இரகசிய ஒப்பந்தம் குறித்து விரைவாக விசாரிக்க ஐ.தே.கவும் வற்புறுத்து

### தெரிவுக்குழு நிறுவும் யோசனைக்கும் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 03

மஹிந்த ராஜபக்ஷவின் அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஒப்பந்தம் தொடர்பாக விசாரணை நடத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்க வேண்டுமென மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரிய ஆராய்ச்சி ஆகியோர் விடுத்திருக்கும் கோரிக்கையை வரவேற்றிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி, அத்தெரிவுக்குழுவை முடியுமானவரை உடனடியாக அமைக்குமாறு சபாநாயகருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியைப் புலிகள்

(03ஆம் பக்கம் பார்க்க)

## பாதைகள் மூடப்பட்டிருந்த போதும் மக்கள் போக்குவரத்து நேற்றுச் சீரானது

யாழ். நகரப்பகுதியில் பிரதான மற்றும் முக்கிய வீதிகளில் தடைகள் போடப்பட்டிருந்த போதிலும் மக்கள் போக்குவரத்துக்கு முழு அளவில் தடங்கல் இல்லாதவாறு நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் யாழ். நகரத் தளபதியுடன் நடத்திய பேச்சுகளின்போது உறுதியளிக்கப்பட்டவாறு நேற்று போக்குவரத்து வசதி சீராக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

முக்கிய வீதிகளில் பொதுமக்கள் மணிக்கணக்கில் நின்று பாதைகளைக் கடக்கும் கஷ்ட நிலை நேற்றுத் தவிர்க்கப்பட்டிருந்தது.

மக்கள் தமக்குரிய போக்குவரத்தை கணிசமான அளவில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டிருந்தனர். வழமையாக போக்குவரத்து தடைவிதிக்கப்பட்டிருந்த பாதைகளில் கூடுதல் படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

படை அணியினரின் போக்குவரத்திற்குப் பாதிப்பில்லாத வகையில் மக்கள் போக்குவரத்து இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC's Sri Lanka program was initiated in 1988 with the aim of supporting durable solutions for the Internally Displaced Persons (IDPs) and returning refugees in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, emergency response, income generation, social mobilisation, capacity development, protection and advocacy; within a strategy based on participation and partnership. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Kilinochchi and a newly established office in Jaffna.

## Vacancies

The following positions need to be filled at our newly established **Jaffna office**.

### Administrative Officer

The Administrative Officer will assist the Head of Office in all matters relating to office administration.

**Qualifications:**
- Basic University Degree.
- Formal training in accounting
- Minimum 03 years Experience in office administration, logistics & liaison with government departments, Etc.
- Good secretarial and inter personal skills.
- Computer skills in MS Office, particularly spreadsheets.
- Good written and spoken English. Ability to converse in Sinhala would be advantageous.

### Protection Field Officers (4 positions)

The Protection Field Officer will work within a district team with a primary role in protection monitoring and response and human rights awareness raising / training (under a UNHCR funded project).

**Qualifications:**
- University Degree (ideally law, politics or social studies) and 1 year of relevant experience or A levels and 2 years of relevant experience
- Knowledge of human rights principles
- Knowledge of government structures
- Confidence and ability to liaise at all levels
- Flexibility, enthusiasm and a creative approach
- Advocacy skills
- Training skills
- Computer skills in MS office and data management skills
- Ability to communicate in written and spoken English

### Field Officers (2 Positions)

The Field Officer will work under the overall charge of the DRC Sri Lanka Representative and under the direct supervision of the Head of Office in all aspects of DRCs rehabilitation programme, development, implementation and documentation. S/he will work closely with local partners, relevant Government departments and other stakeholders.

**Qualifications:**
- University Degree (ideally Management, Agriculture or social studies) and 1 year relevant experience or A levels and 3 years relevant experience (having INGO/NGO experience will be an advantage)
- Knowledge of government structures
- Confidence and ability to liaise at all levels
- Flexibility, enthusiasm and a creative approach
- Good report writing skills
- Good interpersonal skill
- Computer skills in MS office and data management skills
- Reasonable fluency in English

### Drivers (3 Positions)

The driver will be responsible for the transport of personnel and goods safely and for the maintenance of the vehicles in good condition.

**Qualifications:**
- Valid driving license for Private cars, vans and light trucks.
- Fair knowledge of motor mechanism.
- Over 05 years driving experience.
- Pleasant personality.
- Ability to converse in English and Tamil.
- Willingness to travel out of station as and when required.

**Please forward your curriculum vitae along with contact telephone No and names of three non-related referees to the following address within 07 days of this advertisement. The position applied for should be indicated on the top left hand corner of the envelope in applications sent by mail.**

**Head – Finance & Administration**
**Danish Refugee Council**
**No. 77, 1st Floor**
**1st Cross Street**
**Vavuniya.**
**Fax No. 0242224009**
**E mail: recruitment@drc-lk.org**

(C/52127)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் கந்தையா கிருஸ்ணசாமி

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)



தோற்றம் 02-12-1941 — மறைவு 31-01-2007

திதி : 03.03.2007

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று(03.03.2007) சனிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இடைக்காடு,*
*அச்சுவேலி.* (58417) குடும்பத்தினர்.

---

# SUBRA(14)

சித்தன்கேணி

| Spoken English *by:* BRITTO | பேச்சுச் சிங்களம் *by:* லீலாகிருஷ்ணன் |
|---|---|

ஆரம்பம்: 05.03.07 மாலை 4.00

---

## கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக் கருத்தரங்கு

சனி, ஞாயிறு 10-2.30
- பொது உளச்சார்பு
- பொது அறிவு

ஆசிரியர் - தவசேகர்
- மொழித்திறன்

ஆசிரியர் - தங்கரூபன்

**Science Hall**, கன்னாதிட்டி

(58528)

---

**A/L** கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளும் ஆங்கிலமும் நடைபெறுகின்றன
- Gr.1 முதல் O/L வரை.
- Eng.Medium 6, 7, 8
- புலமைப்பரிசில் 5 பரீட்சைகளுடன்.

சிங்களம்
(பேச எழுத வாசிக்க)
Mr.Ranjan

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.

---

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு பிரதான வீதியில் 4 ¾ பரப்புக்காணி, வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
தொ.பே. 094-11-4949234
மின்னஞ்சல்: jeeva66ss@yahoo.com

---

## வீடு உடன் வாடகைக்குண்டு

புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடனான மேல் மாடியுடன் சேர்ந்த வீடு உடனடியாக வாடகைக்குண்டு.
Dr. T.Kulasingam
7/1, நந்தாவில் லேன்,
கொக்குவில்கிழக்கு,
கொக்குவில்.
(சம்பியன்லேன் ஊடாக)
தொ.பே.: 0779793310

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட

## அமரர் பொன்னுத்துரை கனகரெத்தினம்

(வெள்ளையப்பா)



மலர்வு 15-11-1950 — உதிர்வு 01-02-2007

மாதமொன்று ஓடியதோ? நம்பமுடியவில்லை
மரதனோட்ட மாவீரா! மறக்க முடியவில்லையே!
வாழ்க்கை ஓட்டத்தை இடையில் நிறுத்தியதேன்
இறையடி சேர்வதற்கோ? எம்மைத் தினம் அழவைப்பதற்கோ?

துயருற்று நிற்கும் குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவதோடு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஐக்கிய விளையாட்டுக் கழகம்,
பண்டத்தரிப்பு.

(58453)

---

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்



தோற்றம் 10-09-1924 — மறைவு 12-03-1998

திதி : பூரணை 03.03.2007

ஆண்டவன் பொற்பாதம் சேர்ந்து
ஆண்டுகள் ஒன்பது ஆச்சு அப்பா
ஆறவில்லையே எம்மனம்
ஆண்டவனைத் துதிக்கின்றோம்
அனுதினமும்.


*மஞ்சத்தடி முருகன் கோயிலடி,*
*இணுவில்.* (58508)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 03 1945



மறைவு 01 02 2007

## அமரர் எஸ்.ரி.கணநாதன்

(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்)

**ஆண்டு விய வருடம் அம்புலி நிறை நாள்**
**பூண்ட சதுர்த்தசி தைப் பூசம் நன்நாளில் - கணநாதன்**
**நீண்ட சேவையாற்றி நித்தம் இறை தொழுது**
**யாண்டும் போற்ற சேர்ந்தார் மாரி அம்மன் சேவடி.**

எமது குடும்பத் தலைவர் அகாலமரணமடைந்த போது பல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும், பத்திரிகை வாயிலாகவும், தொலைபேசி மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் சார்த்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் இரங்கல் உரைகள் மூலம் அவரின் தன்னலமற்ற சேவைகளை எடுத்துக் காட்டியவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(சி/52118)

*அரியாலை, யாழ்ப்பாணம்.* - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## தெற்கின் அரசியல் ஸ்திரத்தன்மை தீவிரப் போக்குக்கு வழிசெய்கிறது

தென்னிலங்கையில் சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் அதிகாரம் உறுதியானதாக - ஸ்திரமானதாக - வலுப்பெற்றதாக இருந்தபோதெல்லாம் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைக் குரூரமும் தீவிரம் பெற்றது. மறுபுறத்தில், அரசியல் தலைமைகளின் அரசியல் அதிகாரம் கொழும்பில் தள்ளாடியபோதெல்லாம், அடக்குமுறையை அமுக்கி வாசித்து, தமிழரோடு சமரசம் பேணுவது போன்ற ஒரு பாசாங்கு - பாவனை - நடிப்பு - தென்னிலங்கைத் தலைமைகளால் முன்னெடுக்கப்பட்டமையையும் நாம் காண்கிறோம்.

இதற்கு முரணாக, தென்னிலங்கை அரசியல் தலைமைகள் அரசியல் ரீதியாக வலுவோடும், பலத்தோடும் இருந்த சமயங்களில், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்ட சமரச முயற்சிகளில் கூடத் தென்னிலங்கைச் சிங்களம் அதிகாரத் திமிரோடும், பேரினவாதப் போக்கிலான மேலாண்மைச் செருக்குடனுமே விட்டுக்கொடாத பிடிவாதத்துடனும் விடயங்களை அணுகியதையும் நாம் உணர்ந்துள்ளோம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல் அண்மைக்கால சமாதான எத்தனங்கள் வரை இதுதான் கதைகதையாக இருந்து வருகிறது.

'சமாதானத்துக்கான போர்' என்ற இராணுவச் செருக்குடன் கூடிய மோசமான யுத்தத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரம்பித்து தமிழர்கள் மீது மிகக் கொடூரமான போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டார். 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை வரை 'சமாதானத்திற்கான போரின்' வீறும் வீச்சும் தணியவில்லை. அச்சமயத்தில் நாடாளுமன்றத்தில் ஸ்திரமான அரசைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு நிறைவேற்று அதிகாரம் மேலும் வலிமை சேர்த்து, யுத்த முனைப்பில் அவரைத் தீவிரம் காட்ட வைத்தது.

ஆனால் ஆட்சிக்கூட்டுக்குள் குழப்பம் ஏற்பட்டு, நாடாளுமன்றில் சந்திரிகா அரசின் செல்வாக்கும் அதிகாரமும் சரியத் தொடங்கியதும் அவரது சமாதானத்துக்கான யுத்தம் என்ற விநோதக் கொள்கையும் படுக்கத் தொடங்கியது. அடக்கு முறை நிர்வாகம் அடங்கத் தொடங்கியது.

2001 டிசம்பர் பொதுத் தேர்தலை அடுத்து, நிறைவேற்று அதிகாரம் ஒரு கட்சியிடமும் (சந்திரிகாவிடமும்), நாடாளுமன்றப் பலம் மறுகட்சியிடமும் (ரணிலிடமும்) என்று தென்னிலங்கையின் அரசியல் அதிகாரம் பிளவுற்று ஆட்டம் கண்டபோது, சந்திரிகாவின் 'சமாதானத்துக்கான யுத்தம்' முற்றாகவே செயலிழந்துபோனது.

கொழும்பில் அரசியல் அதிகாரம் இரு முனைகளில் பிளவுபட்டு நின்றபோது நாடாளுமன்ற அதிகாரத்தை மட்டும் வைத்திருந்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இறங்கி வந்தார். இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எனத் தனியான தாயகத்துடன் கூடிய தேசக் கட்டமைப்பு ஒன்று மெய்மையாகவே உள்ளது என்ற யதார்த்தத்தை ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தும் வகையில் தமிழர்களோடு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிலைக்கு இறங்கி வரவேண்டியவரானார் அவர்.

அதற்கு முன்னர் தமிழர்களின் ஆயுதம் தரித்த எதிர்ப்புப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்து அதற்கு எதிரான 'சமாதானத்துக்கான போரை' பிரகடனப்படுத்தி அதை முன்னெடுத்து, வாங்கிக் கட்டி, ஓய்ந்துபோயிருந்த ஜனாதிபதி சந்திரிகா கூட, கொழும்பில் தனது நிர்வாக அதிகாரத்தின் செல்வாக்கும் பலமும் அவ்வேளை ஆடிப் போயிருந்தாலும், யதார்த்தம் புரிந்தாலும், அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக வெறும் கண்டனக்கருத்தை வெளியிடுவதோடு அடங்கிப் போனார். அவர் நினைத்திருந்தால் தம்மிடம் இருந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்த ஒப்பந்தத்தை அப்போதே செல்லாக்காசாக்கியிருக்கலாம். ஆனால் தமது அரசியல் அதிகாரம் அச்சமயம் பலவீனப்பட்டு இருந்ததால், தமிழர் தரப்போடு சமரசம் பேசும் கட்டாயத்துக்கு அடங்கிப் போகவேண்டியவரானார் அவர்.

ஆனாலும் விரைவில் - 2003இறுதியில் - இனவாதம் மூலம் தமது அரசியல் அதிகாரத்தை மீண்டும் ஸ்திரப்படுத்தக்கூடிய சூழலும், ஏதுநிலையும் கருக்கட்டி வந்தபோது அவர் தன் கைவரிசையைக் காட்டினார். அதுவே கடந்தகால அனுபவம்.

இப்போதும்கூட - புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதே பாணியில்தான் செயற்படுகின்றார்.

அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றபோது, நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறவும் அதன்மூலம் சட்டமாக்கல் மற்றும் அரச நிர்வாக அதிகாரத்தைத் தக்கவைக்கவும் ஜே.வி.பி. போன்ற பிறகட்சிகளின் தயவில் தங்கியிருக்கவேண்டியவராக இருந்தார். அதனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக அவரது அரசின் பேரினவாதப் போக்கின் தீவிரம் ஆரம்பத்தில் சற்று அடங்கியிருந்தது.

ஆனால் இப்போது மஹிந்தா அரசின் உறுதித்தன்மை அதிகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அணி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தினால் அந்த அரசு அரசியல் உறுதி பெற்றுள்ளது. அதனால் தமிழர்களுக்கு எதிரான ஆட்சிமுறை மேலும் தீவிரமாகும் ஏதுநிலை அதிகரித்துள்ளது.

இதையே -

*"சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் உறுதித்தன்மை தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புப் போரைத் தீவிரப்படுத்துவதற்குத்தான் பயன்படுத்தப்படுகின்றது என்பது சிங்களத்தின் வரலாற்று வழமையாகும்.*

*"ஜே. ஆர். அரசும், சந்திரிகா அரசும் இவ்விதமாகத் தாம் பெற்ற அரசியல் உறுதித் தன்மையைப் போரில் தீவிரப்படுத்தவே பயன்படுத்தியிருந்தன. இப்போது மஹிந்தரும் அந்த வரலாற்றுத் தடத்திலேயே பயணிக்கின்றார்."*

- என்று விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' சஞ்சிகை சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு அரசு, தனக்குக் கிடைக்கும் அரசியல் அதிகாரத்தையும், ஸ்திரத்தன்மையையும், வலுவையும், இந்த நாட்டைச் சீரழித்துவரும் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - நின்று, நிலைத்து, நீடிக்கும் - நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இதயசுத்தியுடன் பயன்படுத்தியிருக்குமானால் இந்த விவகாரத்துக்கு சுமுகத் தீர்வு எப்போதோ கிட்டியிருக்கும் என்பது மட்டும் உறுதி.

# மாணவர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் அனைத்துக்கும் அரசே கவனம் எடுக்கவேண்டும்

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வற்புறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 3

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவத்தின் பிரசன்னத்தில் மத்தியிலேயே எமது மாணவர்கள் கற்றுவருகிறார்கள். அதனால் பாதுகாப்பு ரீதியாக அவர்களுக்கு விளையும் அச்சுறுத்தல்கள் அனைத்துக்கும் அரச தரப்பினரே கவனம் எடுத்துச் செயற்படவேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் ஜெ. சிவரஞ்சனின் கொலையைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகத்தின் சீரான செயற்பாடுகள் காரணமாக வெறுப்புக்கொண்ட தரப்பினால் எமது மாணவர்கள் தொடர் இலக்கு வைத்து கொல்லப்படுவதும், கைது, கடத்தலுக்கு உள்ளாவதும் தொடரும் நிகழ்வுகளாகவுள்ளன.

இதன் தொடராக 01.03.2007 அன்று எமது கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் செல்வரட்ணம் சிவரஞ்சன் நித்திரையில் வைத்து ஊரடங்கு வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

எமது மாணவர்களின் கொலைகள் அனைத்தும் பாதுகாப்பு வலயங்களாக இராணுவத்தினரால் பேணப்படும் அவர்களது கட்டுப்பாட்டுக்கு மிக நெருக்கமான சூழல்களிலேயே நடைபெற்றுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்புக்கு எந்த விதமான உத்தரவாதமும் அற்ற நிலையிலேயே நாம் எமது கல்விச் செயற்பாடுகளை இழப்புகள் மத்தியிலும் தொடர்ந்து வருகின்றோம்.

வன்முறைகள் அற்ற கல்வி நடவடிக்கைகளையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் எமது மாணவர்களின் சிந்தனைத் தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அவர்களின் விரக்தியின் வெளிப்பாடாக அமைவது எதிர்காலத்தை மேலும் நெருக்கடி மிக்கதாகவே மாற்றும்.

எனவே எமது மாணவர்களின் கொலையை கண்டிக்கும் அதேவேளை, இனி வரும் நாள்களில் மாணவர்களை இலக்காக்கும் நிலை தவிர்க்கப்படவேண்டுமெனவும் கேட்டு நிற்கின்றோம் - என்று உள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியம் இக்கொலையைக் கண்டித்து அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது. (அ)

## சுழிபுரம், மாதகல் கடலில் ஒன்றரை மைல் தூரம் மீன்பிடிக்க படையினர் நேற்று அனுமதி

### குடாக்கடலில் 500 மீற்றர் தூரத்துக்கு மட்டுமே செல்லலாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 3

சுழிபுரம் மற்றும் மாதகல் பகுதிக் கடலில் மீன்பிடிப்பதற்கு அப்பகுதி மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அப்பகுதிக் கடற்றொழிலாளர் சங்கங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுழிபுரம், மாதகல் சம்பில்துறை ஆகிய கடற்பகுதிகளில் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்துக்கு கட்டு மரத்தில் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாக் கடற்பகுதியில் சுமார் 500 மீற்றர் தூரம் மட்டுமே சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் ஆயினும் அப்பகுதி மீன்பிடிப்பதற்கு ஏற்றதாக இல்லாமையால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை எனவும் கடற்றொழிலாளர் சமாசச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

தீவகம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக எந்த விதமான அறிவித்தலுமோ தகவலோ வெளிவரவில்லை என்றும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (அ-8)

## யாழ். பல்கலை மாணவனின் சடலத்தை வன்னிக்கு அனுப்ப உதவுமாறு கோரிக்கை

### பாதுகாப்பு அமைச்சுக்கு கஜேந்திரகுமார் எம்.பி. கடிதம்

கொழும்பு, மார்ச் 03

அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் கடந்த புதன்கிழமை சாவகச்சேரியில் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் செல்வரத்தினம் சிவரஞ்சனின் பூதவுடலை அவரது சொந்த இடமான விசுவமடுவுக்கு எடுத்துச் செல்ல உதவு மாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தக் கோரிக்கையைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விடுத்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் தம்மால் யாழ்ப்பாணம் சென்று மகனின் இறுதிக்கிரியைகளைச் செய்ய முடியாது என்று மாணவனின் தாயாரும் சகோதரர்களும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவனின் உடலை யாழ்ப்பாணத்தில் இருந்து விசுவமடுவுக்கு கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி மற்றும் ஏற்பாடுகளைச் செய்து உதவுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (ஐ)

## பேச்சு மூலமே தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது மேலும் கூறியதாவது:-

சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் அதாவது அரசும் புலிகளும் மீண்டும் பேச்சு மேசைக்கு வரவேண்டும். பேசுவதன் மூலம் தான் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண முடியும் என்பதே அமெரிக்காவின் நிலைப் பாடு.

இன்று ஆட்சியில் இருக்கும் ஸ்ரீல.சு.கட்சி அரசு நியாயமான அதிகாரப் பரவலாக்கத்திற்கு இணங்கவேண்டும். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்கவேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலான ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீல.சு.கவும், ஐ.தே.கவும் இணைந்து செயற்படவேண்டும். அதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தக் கிட்டியுள்ள வாய்ப்புகளை தவறவிட்டுவிடக்கூடாது என்றும் அமெரிக்கத் தூதர் குறிப்பிட்டார். (ஐ)

## மஹிந்த - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று வர்ணித்தது இந்த அரசு. இப்போது புலிகளுக்கும் அரசுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்தமை அம்பலமாகியுள்ளது.

புலிகளுடன் ஒப்பந்தம் செய்கையில் அரச குழுவில் கூட இருந்தவரே இந்த விடயத்தை மிகத் தெளிவாகக் கூறும்போது அதில் நிச்சயமாக உண்மை இருக்கத்தான் செய்யும்.

அவ்வாறு கூறப்படுவது பொய் -என்றால் அரசு ஏன் மௌனம் சாதிக்கவேண்டும்? உடனடியாகத் தனது கருத்தைச் சொல்லலாமே.

புலிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டமை பொய் என்று நிரூபிப்பதற்கு அரசிடம் எந்த ஆதாரமும் இல்லை. அதனால்தான் மௌனம் சாதிப்பதன் மூலம் அரசு உண்மையை ஒத்துக்கொள்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்குமாறு மங்களவும், சிறிபதியும் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வேண்டுகோளை நாம் வரவேற்கின்றோம். காலந்தாமதிக்காது இந்த அரசின் ஊழலைச் சந்திக்குக்கொண்டு வருவதற்காக தெரிவுக்குழுவை உடனடியாக அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் சபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றோம் ... (ஐ)

## வடக்கு - கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனை அரசு அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ளது.

இதுபோன்று அண்மைக்காலங்களில் மலையகத் தமிழர்களும் பாதுகாப்புப் படையினராலும், பொலிஸாராலும் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் கொழும்பிலும் ஏனைய நகர்புறங்களிலும் தொழில் செய்து வந்த தோட்டப்புற இளைஞர், யுவதிகள் கைதுசெய்யப்பட்டனர்.

இப்பொழுது தோட்டங்களுக்குச் சென்று அப்பாவி தோட்டத் தொழிலாளர்களையும் கைது செய்கின்றனர். இரவு நேரங்களிலும், அதிகாலை வேளையிலும் தொழிலாளர்களின் வீடுகளுக்குள் நுழையும் பாதுகாப்புப் படையினர் சோதனை என்ற பெயரில் வீடுகளில் உள்ள பெண்களுக்குப் பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் மலையகத்திலும் அமைதியற்ற ஒரு நிலை ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது. எனவே, தோட்டத் தொழிலாளர்களும், மலையக ஆசிரியர்களும், கைதுசெய்யப்படும் விடயத்தில் பிரதமர் நேரடியாகத் தலையிட வேண்டும். அப்பாவிகள் கைதுசெய்யப்படுவதைத் தடுக்க வேண்டும் - எனவும் வேலாயுதம் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க)

## யாழ். பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரதத்தில் ஈடுபட்டனர்.

**ஒருவாரகாலம் துக்கம் அனுஷ்டிப்பு**

இதேவேளை -

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து தொடர்ந்து ஒருவாரகாலம் துக்கம் அனுஷ்டிப்பதென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தினால் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

உயிரிழந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நேற்றுப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. மாணவர் ஒன்றியப் பிரதிநிதி தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் பதில் துணைவேந்தர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

பல்கலைக்கழக வாயிலில் கறுப்புக்கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. (அ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

## வரணியில் நள்ளிரவில் இளைஞன் சுட்டுக்கொலை

வரணி - இயற்றாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் வியாழக்கிழமை நள்ளிரவு ஒருமணியளவில் நுழைந்த பத்துப் பேர் கொண்ட குழு அங்கு படுத்திருந்த இளைஞனைச் சுட்டுக் கொலை செய்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவகுமார் (வயது 27) என்ற இளைஞனே கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரஸ்தாப நபர் தமது வீட்டில் நித்திரையில் இருந்த வேளை 10பேர் கொண்ட குழு அவரைப் பிடிக்க முயன்றனர். அப்போது அவர் தப்பி ஓடவே அவரைச் சுட்டுவிட்டு அக்குழு சென்றது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## மண்ணெண்ணை விநியோகம் இன்று

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/68, ஜே/69, ஜே/71, ஜே/72, ஜே/73, ஜே/81, ஜே/83 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய மண்ணெண்ணை விநியோக இறுதித் தினம் இன்றாகும்.

அவர்களுக்கான மண்ணெண்ணை விநியோகம் இன்று காலை 9 மணிமுதல் முற்பகல் 4 மணி வரை முற்றவெளியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் இடம்பெறும்.

இதேவேளை -

மார்ச் மாதத்திற்கான மண்ணெண்ணை விநியோகம் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை இடம்பெறும். (1-202-17)

## வெளிமாவட்ட அரச ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவை பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்திற்கு அருகில் நடைபெறவுள்ளது. (1-202)

## மனைமுகாமைத்துவப் பயிற்சி

மானிப்பாய் மெமோறியல் நவோதயக் கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவு நடத்தும் மனைமுகாமைத்துவப் பயிற்சி இன்று சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளது.

பயிற்சியில்இணைந்துகொள்ள விரும்புபவர்கள் அன்றையதினம் காலை 9.30 மணிக்கு கல்லூரிக்கு சமுகம் தருமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (1-202)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர். அது மோட்டார் குண்டா அல்லது ஆட்லறி ஷெல்லா என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

ஷெல் வீழ்ந்த இடத்துக்கு அண்மையில் அமைந்துள்ள ஈரற்பெரியகுளம் பரகும்பா பாடசாலையில் இருந்த மாணவர்கள் பீதியடைந்து பாடசாலையை விட்டு வெளியேறி ஓடினர். மாணவர்களை அழைத்துச் செல்வதற்காகப் பெற்றோர்களும் பாடசாலைகளுக்கு ஓடிவந்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றமும் பரபரப்பும் காணப்பட்டது.

வவுனியா நகரில் உள்ள சிங்களப் பாடசாலையான காமினி மகாவித்தியாலய மாணவர்களும் நேரகாலத்துடன் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். (ஐ-164)

## நாளை

*மாசி - 20*
*ஞாயிற்றுக்கிழமை*
*04.03.2007*
*திதி: பிரதமை முழுவதும்*
*நட்சத்திரம் : பூரம்*
*முன்னிரவு: 08.04*
*சுபநேரம் : 09.26 - 10.56*
*ராகுகாலம் : 04.56 - 06.26*

## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

### வருடாந்த விளையாட்டுப் போட்டி-2007



**மேற்பிரிவு:** (16 வயதிற்கு மேற்பட்டோர்)
கரம்
டாம்
சதுரங்கம்
பூப்பந்து

**கீழ்ப்பிரிவு:** (16 வயதிற்கு உட்பட்டோர்)
கரம்
டாம்
சதுரங்கம்
பூப்பந்து

விண்ணப்ப முடிவு திகதி 07.03.2007

ஆண், பெண் இருபாலாருக்கும். விண்ணப்பங்கள் நிலையத்தில்.

**1124, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
(வண்ணை. நாச்சிமார் கோயில் பின்வீதி)


ஓம் ஸ்ரீ சாயிபாபா

## யாழ்.மத்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் புதிய அமைவிடத் திறப்பு விழா

யாழ்.மத்திய பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் புதிய அமைவிடம் சுவாமியின் கருணையினாலும் ஆசீர்வாதத்தாலும் நாளை (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படும்.

**இடம்**- இல.416, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(கைலாசபிள்ளையார் கோயில் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக 50 யார் தூரம்)

நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

சாயி அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் யாழ். மத்தி.

## 12ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### தியாகராசா அரசரத்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி காரைநகர்)

*தோற்றம்* 18-04-1942 — *மறைவு* 14-02-1995

**திதி: 05-03-2007**

பன்னிரண்டு ஆண்டுகள் ஆனாலும் அப்பாவே!
உங்கள் நினைவு என்றைக்கும் எம் நெஞ்சை விட்டகலாது.

*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 01.02.2007 வியாழக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சின்னத்துரை தங்கம்மா

*மலர்வு* 04-12-1922 — *உதிர்வு* 01-02-2007

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று03.03.2007 சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்திக்கலட்டி,*
*சுன்னாகம் மேற்கு,சுன்னாகம்.*

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் கணபதியார் வேலுப்பிள்ளை சரவணமுத்து



(ஆசைப்பிள்ளை)
(அற்புத நர்த்தன விநாயகர் ஆலய அறங்காவலரும் யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் ஸ்தாபகரும்)

*தோற்றம்* 10-11-1918 — *மறைவு* 14-03-2006

அன்னாரின் நினைவாக இன்று (03.03.2007) எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முதலாம் வீதி, இருபாலை றோட்,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### *செல்லத்துரை பாக்கியம்*

கோப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை பாக்கியம் நேற்று (02.03.2007) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னாச்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் செல்வகுமார் (கனடா), அமரர் சிவகுமார் (வவா) ஆகியோரின் தாயும் அமரர் கந்தையாவின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**V.C** *ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

தகவல்:
சி.சந்திராதேவி (மருமகள்).

## இலங்கை மின்சார சபை
## யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

03.03.2007 சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலை காரணமாக மின்சாரம் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

பலாலி, கந்தர்மடம், ஆரியகுளம், ஓ.எல்.ஆர். தேவாலயம், மடத்தடி, குருநகர், சீநோர், உப மின் நிலையத்திற்கு உட்பட்ட இடங்கள், யாழ். நகரப் பகுதி.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்குமனம் வருந்துகின்றோம்.

**பிரதேச மின் பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை, யாழ். பிரதேச அலுவலகம், சுன்னாகம். 02.03.2007**

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.

## மரண அறிவித்தல்கள்



### *மாணிக்கம் மனோகரன்*

(மனோ களஞ்சியம் உரிமையாளர் - அரியாலை)

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கு கனகரத்தினம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோ களஞ்சிய உரிமையாளர் மாணிக்கம் மனோகரன் 01.03.2007 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன் மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் ரஜிதாவின் அன்புக் கணவரும் கந்தசாமி - சிவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் முருகேசு, நாகம்மா, இராஜேஸ்வரி, செல்வமணி, காலஞ்சென்றவர்களான கணேசு, தேவதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் றுபேஸ் (உணவு கட்டுப்பாட்டுத் திணைக்களம், நாவற்குழி), றுதீஸ்(யாழ். மத்தியகல்லூரி மாணவன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2007) சனிக்கிழமை அவரது வேலப்பர் லேன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு தகனக் கிரியைக்காக நல்லூர் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*43/ 3, வேலப்பர் லேன்,*
*அரியாலை மேற்கு.*

தகவல்:
றுபேஸ்
(மைத்துனர்)

### *செல்லையா கார்த்திகேசு*



அளவெட்டி மேற்கு, அளவெட்டியைச் சேர்ந்த செல்லையா கார்த்திகேசு 02.03.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரகுமார், சாந்தகுமார், சிவகுமார், வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.03.2007 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப் பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்வன் மகேந்திரன் பிறேமானந்

அன்னை மடியில் 01-07-1979 — தெய்வத்தின் பாதத்தில் 03-03-1996

தெய்வத்தில் சேர்ந்த தெய்வமே
ஆண்டுகள் பலவானாலும் ஆறவில்லை
எம் துயரம் மாறவில்லை எம்சோகம்
என்றும் உம் நினைவுடனேயே வாழ்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.26/21, கொழும்புத் துறை,
யாழ்ப்பாணம்.

பாசம் மாறாத
குடும்பத்தினர்.

## ஈர விழிகளுடன் 25 ஆண்டுகள்

### அமரர் சின்னத்துரை கந்தசாமி

*மண்ணில்* *01.01.1931* — *விண்ணில்* *08.03.1982*

**திதி: பூரணை 03.03.2007**

அன்புடன் எமைப் பெற்று ஆசையுடன் எமை வளர்த்து இடைநடுவிலே எமை விட்டு ஈன்று பலன் அனுபவியாமல் தூர தேசம் தாங்கள் சென்று நெடுநாள்கள் சென்றிடினும் உமை எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கின்றோம்.
*உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.*

*பிரிவை எண்ணி...*
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்கானை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி பாலசிங்கம் மகிழ்மலர்

01.02.2007 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த் தனை இன்று (03.03.2007) சனிக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம்.

*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில் மேற்கு, சுன்னாகம்.*

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி நடராஜா சிவக்கொழுந்து*

மூளாயைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா சிவக்கொழுந்து நேற்று (02.03.2007) காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு.

*தகவல்:*
தெய்வேந்திரா (மகன்).

### *கதிரவேலு பரமானந்தசிவம்* (ராசா)



சரவணையைப் பிறப்பிட்மாகவும் 67/1, அம்மன் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பரமானந்தசிவம் 27.02.2007 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கதிரவேலு - முத்தாச்சி தம்பதியரின் மகனும் சுப்பிரமணியம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவரூபி, ஜெயதீபன் (ஜெய ஸ்ரீ பிரின்டெஸ்), சுபராஜினி (யாழ். பல்கலைக்கழக இறுதி வருட வர்த்தகப்பிரிவு மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சனனின் பாசமிகு மாமனும் சாருயனின் பாசமிகு பேரனும் பாக்கியலெட்சுமி, பேரம்பலம், காலஞ்சென்ற நகுலாம்பிகை மற்றும் இரட்சனியதேவி, மகேஸ்வரி, சண்முகராசா, கிருபாதேவி, கண்ணுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பசுபதி மற்றும் பரமேஸ்வரி, சரஸ்வதி, சிவபாதம், புண்ணியமூர்த்தி, சண்முகநாதன், வித்தியானந்தன், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.03.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா பூவரசங்குளத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*67/1, அம்மன் வீதி,*
*கந்தர்மடம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### *வீரபத்திரன் நாகராசா* (நயினாதீவு)



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வீரபத்திரன் நாகராசா 01.03.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரபத்திரன் - இராமாசிப்பிள்ளை தம் பதியரின் அன்பு மகனும் இராமச்சந்திரன் - நாகமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் பத்மநாதன் (வர்த்தகர் நவீன சந்தை, திருநெல்வேலி), காலஞ்சென்ற யோகநாதன், தருமசொரூபி, யோகலீலா (இத்தாலி),ஜெகநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்புலெட்சுமி,காலஞ்சென்ற முருகதாஸ், புவீந்திரன் (இத்தாலி), கலைச்செல்வி(பிரான்ஸ்)ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ் சென்றவர்களான சதாசிவம், சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, சின்னம்மா, சவுந்தரம், முத்தையா, செல்லப்பா ஆகியோரின் மைத்துனரும் ரதீஸ்(சுவிஸ்), தினேஸ்குமார், சோபிகா, அருண்குமார், அனுஷிகா, சார்லினி (சுவிஸ்), தரிசினி (இத்தாலி), நளாயினி, ஜெயந்தினி, கிருபாகரன் (இத்தாலி), ரஜிசங்கர், தாரணி, நிஷாந்தன், ஜனனி, ஜனார்த்தனன் ஆகியோரின் பேரனும் ஜந்துசன், சாரங்கன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.03.2007) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு நயினாதீவு சல்லிபரவை ம்யானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

தகவல்: நா.பத்மநாதன்
(வர்த்தகர், நவீனசந்தை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org